போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...

வாள் 3 | [திருவள்ளுவர் ஆண்டு 1980 கார்த்திகை 11 | வீச்சு 13
26—11—49 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:



உங்கள் திறமைக்கு ஒரு சோதனை !

இவர்
யாரென்று தெரிகிறதா?
[விடை அடுத்த வாரம்]

ஒரு துளி தைரியம்! சிறிதளவு பகுத்தறிவு!

இவ்விரண்டும் இருந்துவிட்டால் எவ்வளவோ செய்யலாம்!

செய்யமுன்வருவரா சென்னை ஆட்சியாளர்கள்?

★

1

இருக்கும் இடம்
855 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
1108 பேர்

2

இருக்கும் இடம்
462 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
697 பேர்

3

இருக்கும் இடம்
150 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
168 பேர்

4

இருக்கும் இடம்
62 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
92 பேர்

5

இருக்கும் இடம்
298 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
499 பேர்

6

இருக்கும் இடம்
367 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
492 பேர்

7

இருக்கும் இடம்
100 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
177 பேர்

8

இருக்கும் இடம்
375 பேருக்கு
ஆனால் இருப்பவர்கள்
445 பேர்

மேலே பொறிக்கப்பட்டுள்ள புள்ளிவிவரங்கள் எட்டினையும் மீண்டும் ஒரு முறை கவனமாகப் படித்துப் பாருங்கள். ஒவ்வொரு புள்ளி விவரத்திலும், இருக்கவேண்டியவர்களின் எண்ணிக்கையை விட உண்மையில் இருப்பவர்களின் தொகை மிக அதிகமாக இருக்கக் காண்பீர்கள்.

சென்னை நகரத்தில், சர்க்காரால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகள் மொத்தம் எட்டு இருக்கின்றன—முறையே, ஜெனரல் ஆஸ்பத்திரி, இராயபுரம் ஆஸ்பத்திரி, இராயப்பேட்டை ஆஸ்பத்திரி, க்ஷயரோக ஆஸ்பத்திரி, பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான ஆஸ்பத்திரி, கஸ்தூர்பா ஆஸ்பத்திரி, ராஜாசர் ராமசாமி ஆஸ்பத்திரி, கண் ஆஸ்பத்திரி ஆகிய எட்டு ஆஸ்பத்திரிகள். இந்த மருத்துவ நிலையங்கள் ஒவ்வொன்றிலேயும் இருக்க வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதும், ஆனால் இதுபோது இருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதும், முன்னதை விடப் பின்னது எவ்வளவு அதிகமாக இருக்கின்றன என்பதும் தான் மேலே தந்துள்ள புள்ளி விவரங்களின் வாயிலாக நமக்குப் புலப்படும் மூன்று உண்மைகள்.

ஒவ்வொரு மருத்துவ நிலையத்திலும், இருக்க வேண்டிய நோயாளிகளின் தொகையைவிட அதிகமான பேரை, ஆட்சியாளர்கள், அனுமதி செய்து, அவர்கள்தம் நோயைப் போக்குகிறார்கள் என்றால் அது, மகிழ்ச்சிக்கும் நம் மனத் திருப்திக்கும் உரிய ஒரு சேதிதானே, அதிலே தவறென்ன இருக்கிறது, அந்த உதார குணத்தையும் தாராள மனோபாவத்தையும் நாம் பாராட்டத்தான் வேண்டுமே தவிர எப்படிக் குறை சொல்ல முடியும், இருக்கும் இடமும் கிடைக்கும் வசதிகளும் கொஞ்சம்தான் என்றாலும் எப்படியோ, எந்தவிதமாகவோ, எவ்வளவு கஷ்டப்பட்டோ, மேலும் பல நோயாளிகளுக்கு இடம் அளித்திருப்பது மிக மிக நல்லதோர் பணிதானே என்றுதான் எவரும் கேட்பர்.

ஆம், ஆம், அந்த அளவுக்கு அது நல்ல பணிதான். பாராட்டப்பட வேண்டிய பண்புமிகு செயல்தான், நம்மால் போற்றிப் புகழப்பட வேண்டிய புனிதத் தொண்டு தான் இல்லை என்று நாம் கூறவில்லை, நோயாளிகள் சிலருக்கே இடம் இருக்க, பலரைச் சேர்த்துக் கொண்டு இருக்க இடம் அளித்து உண்ண உணவு கொடுத்து, நோயையும் ஒழித்துக் கட்டி, அவர்களை நல்லுடல் படைத்த நிலையினராக ஆக்கி அனுப்புவதை எவரும் போற்றத்தான் வேண்டும். போற்றுவதுதான் முறை.

ஆனால் ஒன்று. இப்படி அதிகப்படியாக மருத்துவ நிலையங்களில் சேர்க்கப்படும் நோயாளிகள் இருக்கிறார்களே, அவர்கள் அங்கே இருக்கும் நிலையையும் அவர்கட்கு அங்கு தரப்படும் வசதிகளையும் காணும்போதுதான் வேதனையும் வெட்கமும் நம் உள்ளத்தை வாட்டத் தொடங்குகின்றன. கண்ணீர், நம்மையறியாமலே, நம் கன்னங்களை நீராட்டவும் தொடங்குகின்றது.

ஒவ்வொரு மருத்துவ நிலையமும் ஒரு குறிப்பிட்ட அளவு நோயாளிகளுக்கு இடம் இருக்கும் விதமாகத்தான் கட்டப்படுகின்றது. அந்தக் கட்டிடத்தில் உள்ள ஒவ்வோர் அறையிலும் மருத்துவ முறைப்படியும் நோயாளிகளின் உடல் நலத்துக்கு உகந்த விதத்திலும் எவ்வளவு அதிகமாகப் படுக்கைகள் போடமுடியுமோ, அவ்வளவு அதிகமாகப் போட்டு, அத்தனை படுக்கைகளுக்கும் நோயாளிகளைச் சேர்த்துக் கொண்டால் மொத்தம் எவ்வளவு நோயாளிகளின் தொகை வருகிறதோ அந்தத் தொகைக்குத்தான்' அந்த மருத்துவ நிலையத்தில் இருக்கவேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை என்று பெயர்.

எனவேதான், இந்த எண்ணிக்கையைவிட அதிகமான அளவுக்கு நோயாளிகள் சேர்க்கப் பட்டால், அப்போது மருத்துவ நிலையத்தில்; அவர்களுக்கு, இயற்கையாகவே போதிய இடம் இல்லாமல் போகிறது. போகவே, அவர்களை, அறைக்கு உள்ளே, படுக்கைக்குப் படுக்கை உள்ள இடை வெளியிலேயும், நடப்பதற்கு என்று ஒதுக்கப்பட்டுள்ள நடை வெளியிலேயும், ஒதுக்குப் புறங்களிலேயும், அறைக்கு வெளியே தாழ்வாரத்திலேயும், உயரமான இடத்தில் அல்ல—தரையில், கட்டில் மீதல்ல—கீழே, சாதாரண பாயின் மீது அவர்களைக் கிடத்திவைக்க நேரிடுகிறது.

நோயற்ற நல் நிலையில் இருப்பவர்களேகூட ஓர் அறையில், இருக்கவேண்டியவர்களை விட அதிகமான பேர் படுத்துத் தூங்கினால், அதனால் அவர்கள் விடும் மூச்சுக் காற்று கெட்டு, அவர்கள் உடல் நலம் நாளடைவில் சீர் கேடுற்றுச் சிதைகிறது என்பது மருத்துவநூல் முடிவு. நோயற்ற நல்லுடல் படைத்தவர் நிலையே இது என்றால், பிணி வாய்ப்பட்டவர்கள் பலர், இருக்க வேண்டியவர்களை விட அதிகமான அளவு, மருத்துவ நிலைய அறைகளில் அடைக்கப்படும்போது, அதனால் விளையும் கேடு எவ்வளவு அதிகமாக இருக்கும் என்பதை நாம் கூறவும் வேண்டுமோ?

இருக்கும் நோயாளிகள் தொகையோ அதிகம்—கிடத்தப் படுவதோ தரையில்—இருக்கும் இடமோ தாழ்வாரம் என்று சொன்னால், பிறகு, அந்த நோயாளிகளின் நிலைமை எவ்வளவு பரிதாபகரமானது என்பதைச் சொற்களால் சித்தரிக்கத் தேவையில்லை—எவரும் அதை எளிதில் உய்த்துணரமுடியும்.

இத்தகு வேதனை நிலைமை, சென்னை மருத்துவ நிலையங்களில் நிலவுகிறது என்னும் உண்மை ஆட்சியாளர்கட்குத் தெரியாமலா இருக்கும் என்று கேட்கிறீர்களா—தெரியும், மிக நன்றாகத் தெரியும்! நாம் தந்துள்ள எட்டுப் புள்ளி விவரங்களையும் எழில்மிகு முறையில் எடுத்துக் காட்டியவரே சுகாதார அமைச்சர் கனம் டி. எஸ். எஸ். இராஜன் அவர்கள் தான். எடுத்துக் காட்டியிருக்கும் இடமும் மகிமை பொருந்திய மாபெரும் சட்ட சபைதான்!

நிலைமை தெரிந்தேதான் இருக்கிறது சர்க்காருக்கு என்றால், தெரிந்திருந்தும் அவர்கள் வாளா இருத்தல் எது கருதி? இப்படிப்பட்ட நிலைமை நன்றன்று என்பதை அறிந்திலரோ ஆட்சியாளர் என்று அடுத்தாற்போல் வேறொரு ஐயவினாவை எழுப்பக்கூடும் வாசக நேயர்கள். அந்த ஐயத்திற்கும் இடமில்லை—இத்தகு நிலைமை இருப்பது எங்கட்கு மிகுந்த வேதனையைத்தான் தருகிறது என்று கனம் அமைச்சரே சட்ட சபையில் கருத்துரை புகன்றிருக்கிறார்.

எனவே, மருத்துவ நிலையங்களில்' இந்நாளில் இருக்கும் நிலைமை இது என்பதையும் ஆளவந்தார்கள் அறிவர். இத்தகு நிலைமை இருத்தல் கூடாது என்பதையும் அறிவர். அறிந்தும்தான், இத்தகு நிலைமையை நீடிக்க விடுவது நாட்டுப் பொது நலத்திற்கு ஊறு மிக விளைப்பது என்பதைத்தெரிந்தும் தான், மருத்துவ விதிகளை மீறி மேலும் மேலும் நோயாளிகளை இடமில்லா நிலையில் சேர்த்துக் கொள்வது தகாது தவறு என்பதை உணர்ந்தும் தான், இந்த நிலையை நீடிக்க விடுகின்றனர் நம் 'அருமை' ஆட்சியாளர்கள்.

"என்னையா போர்வாளரே! எதற்கெடுத்தாலும் குற்றம் கூறுவது தான் உம்முடைய வேலையோ? இடமில்லை என்று கூறி வெளியே விரட்டி விட்டால் இந்த நோயாளிகள் என் செய்வர் பாவம் என்ற நல்ல நோக்கத்தோடுதானே, அதிகப்படியான நோயாளிகளை ஆஸ்பத்திரிகளில் சேர்த்துக் கொள்கின்றனர் ஆட்சியாளர்கள். இதைப் போய்க்குற்றம், என்கிறீரே, அப்படியானால் இருக்க வேண்டிய எண்ணிக்கை நிறைந்து போனதும் மேற் கொண்டு வரும் நோயாளிகளை விரட்டியடிக்க வேண்டும் என்று கூறுகிறீரோ? அதுதான் நீர் கற்ற மருத்துவ முறையோ? அதுதான் உம்முடைய சுகாதாரத் திட்டமோ? அப்போதுதான் உம்முடைய உள்ளம் களிக்குமோ? அதுதான் முறை, சரி ஒழுங்கு என்று நீர் கருதுகிறீரோ, கூறுமையா கூறும்! சற்றுத்தெளிவாகக் கூறும்" என்று கடுங்கோபத்துடன் கேட்கக் கூடும் சில வாசகர்கள்—அதிலும், கட்டுரையைப் படிப்பவர்கள், கதர் சட்டை கனவான்களாயிருந்தால், கொதிப்பு மொழிகளை வீசுவது மட்டுமல்ல, இவர்தம் அறிவுத்திறம் இருந்தவாறு என்னே என்னே என்று கேலிப்பாணம் தொடுக்கவும் தயங்கார்.

ஆனால் நாம் கூறுவது, அதிகப்படியுள்ள நோயாளிகளை வெளியே விரட்டி விடவேண்டும் என்பதல்ல. நிச்சயமாக அது அல்ல நாம் கூறுவது. இப்போதே, அதிகப்படியாக அனுமதிக்கப்பட்டுள்ள இந்த நோயாளிகளைத் தவிர இன்னும் ஏராளமான பேர், இடமில்லை என்ற காரணத்தால் உள்ளே சேர்க்கப் படாமல் வெளியே, வந்த வழிபார்த்துச் சென்றிடுவீர் என்ற வாசகத்துடன் திருப்பி அனுப்பப் பட்டிருக்கின்றனர். இதை கனம் அமைச்சர் அவர்களே கண்ணியமாக ஒப்புக்கொண்டும் இருக்கிறார். இப்படிக் கைவிடப்பட்ட நோயாளிகளின் கதை மிக மிகப் பரிதாபமானதோர் காவியம். சோகம் ததும்பும் இவர்கள் நிலையை விட உள்ளே சேர்க்கப்பட்ட அதிகப்படி நோயாளர் நிலை எவ்வளவோ மேலானது—எனவே உள்ளே இருக்கும் இந்த 'அதிகப்படி' யினை

ரையும் வெளியே திண்டாடும் அந்த பரிதாபப் பட்டாளத்தில் சேர்த்து விடவேண்டும் என்று நாம்ஒரு போதும் கூறமாட்டோம்.

"பிறகு என்ன தானையா கூறுகிறீர் நீர்? அதிகப்படியினர் உள்ளே இருப்பதும் ஆகாது என்கிறீர், அவர்களை வெளியே துரத்துவதும் அடாத செயல் என்கிறீர், அப்படியானால் என்னதான் செய்யவேண்டும் என்கிறீர்" என்று நீங்கள் வெகுண்டெழுந்து கேட்பதற்கு முன்னால் நாமே கூறிவிடுகிறோம்—இந்த வேதனை நிலையைத் தீர்க்கும் வழிகள், 1 இருக்கும் மருத்துவ நிலையங்களின் பரப்பையும் அளவையும் அதிகப்படுத்துவது. 2. புதிய மருத்துவ நிலையங்களை ஆங்காங்கே உண்டாக்குவது ஆம்! இந்த இரண்டும்தான் உடனடியாகச் செய்யப்படவேண்டிய சீர்மிகு பணிகள், இந்த இரண்டையும் செய்தால்தான், நோயாளிகள் துயர் தீரும், இன்று மருத்துவ நிலையங்களில் காணப்படும் வேதனை நிலைமையும் மாறும்.

இந்த இரண்டையும் செய்யப் போகிறார்களா சென்னை ஆட்சியாளர்கள்? இல்லை! செய்யப் போவதில்லை! நிச்சயமாக இல்லை!!

'இ'—'ல்'—'லை'—இந்த மூன்று எழுத்துக்களையும் அழுத்தம் திருத்தமாக உச்சரித்துக் காட்டிவிட்டார் நலத்துறை அமைச்சர் திரு டி. எஸ். எஸ். இராஜன் அவர்கள்.

இல்லை! முடியாது! நடவாது! ஆகாது! செய்ய இயலாது! — இந்தத் தோரணையில் சட்டசபைச் சொற்பொழி வாற்றிவிட்டார் இராஜனார்!

ஏன் முடியாது?—உடனே இது போலக் கேட்டனர் சட்டசபை உறுப்பினர்களிற் சிலர். காங்கிரஸ் உறுப்பினர்கள் அல்ல—அவர்கள்தான் கொட்டாவி விடும் நேரம் தவிர வேறு எந்த நேரத்திலும் சட்டசபையில் வாய்திறந்தறியாரே—கேட்டவர்கள், சட்டமன்றத்தில் உள்ள முஸ்லிம் உறுப்பினர்களும் கிறித்தவத் தோழர்களும் எதிர்க்கட்சியினரும்,

"ஏன் முடியாதா? பணம் இல்லை, எனவே முடியாது" என்று விடையும் கூறிவிட்டார் ஸ்ரீமான் இராஜன்!

மருத்துவ நிலையங்களில் இன்று இருக்கும் நிலைமையும் தெரியும்—அந்த நிலைமையை நெடுநாள் நீடித்திருக்க விடுவது பெருந்தவறு என்பதும் தெரியும்—அவரே ஒரு டாக்டர், ஆகவே ஏனையோரை விட, அவர். இதை மிக நன்றாக அறிவார் — அறிந்திருப்பது மட்டுமல்ல, இந்த நிலைமையை நினைக்கும் போது உள்ளம் வேதனைப்படத்தான் செய்கிறது என்று சட்டசபையில் சொற்பொழிவு ஆற்றியும் இருக்கிறார்—என்றாலும் கூறுகிறார் நண்பர் இராஜன் மருத்துவ நிலையங்களை அதிகரிக்க முடியாது என்று!

பணம் இல்லையாம் பணம், இவ்வளவு முக்கியமான பணி புரிவதற்குக் கூட பணம் இல்லையாம் பணம்! சொல்லுகிறார் சொகுசான மொழியில் இந்தச் சோகமதரும் செய்திதனை சுகாதார அமைச்சர்!

பணமா இல்லை? ஏராளமாக இருக்கிறது, மிகத் தாராளமாக இருக்கிறது.

எவ்வளவு வேண்டுமானாலும் அள்ளிக் கொள்ளலாம், அவ்வளவு அதிகமாக இருக்கிறது.

தேவையான அளவுக்கு இருக்கிறது. தேவைக்கு மேலும் இருக்கிறது.

அள்ள அள்ளக் குறையாத பெருநிதி என்று கூறக்கூடிய அளவுக்கு இருக்கிறது—குன்று போல் கொட்டிக் குவித்துவைக்கப்பட்டிருக்கிறது

எடுத்துக் கொண்டால் எத்தனையோ மருத்துவ நிலையங்களை எங்கெங்கும் அமைக்கலாம். ஜில்லாவுக்கு ஜில்லா, தாலுக்காவுக்கு தாலுகா, ஒரு ஜெனரல் ஆஸ்பத்திரி கட்டலாம். நோயாளிகளின் குறைகளைப் பற்றறத் தீர்க்கலாம். பிணியின் வாடையை தென்னாட்டைவிட்டு விரட்டலாம். நல்வாழ்வு, சுகாதார ஒளி, திக்கெட்டும் பரவும் வகை செய்யலாம்.

இவ்வளவும் செய்யலாம், இதற்கு மேலும் கூட செய்யலாம். அவ்வளவுக்கும் பணம் இருக்கிறது. ஒரு துளி தைரியம், சிறிதளவு பகுத்தறிவு—இவ்விரண்டும்தான் தேவை. இவ்விரண்டும் இருந்து விட்டால் எவ்வளவோ செய்யலாம்.

யாரிடம் இருக்கிறது இவ்வளவு பெருந்தொகை என்று கேட்கிறீர்களா? கூறுகிறோம் பட்டியலை, குறித்துக் கொள்ளுமின் வரிசை வரிசையாக,

திருப்பதி வெங்கடாசலாதிபதி
தில்லை நடராசர்
திருவாரூர் தியாகேசர்
திருச்சி அரங்கநாதர்
காஞ்சி வரதராஜர்
மதுரை மீனாட்சி
அண்ணாமலை அருணாசலர்
பழனிமலை முருகர்
திருச்செந்தூர் வேலர்
தஞ்சை பிருகதீஸ்வரர்
திருமயிலைக் கபாலீஸ்வரர்
திருவல்லிக்கேணி பார்த்தசாரதியார்
திருவொற்றியூர் ஈசனார்
திருத்தணி மலைவாசி

பட்டியல் முழுவதையும் குறிக்க இந்தப் போர்வாள் ஏடு முழுவதும் கூடப் போதாது. பட்டியல் வளர்கிறது. மேலும் மேலும் வளர்கிறது. சென்னை மாகாணத்தில் மொத்தம் 27,589 கோவில்கள் இருக்கின்றன. அவ்வளவையும் இங்கே குறிப்பது ஆகாத காரியம். இந்த இருபத்தி ஏழாயிரத்து ஐந்நூற்றி எண்பத்தி ஒன்பது கோயில்களிலும் ஏராளமான சொத்து, கோயில் நிலமாக, யானை குதிரை எருது வாகனமாக, தங்கம் வெள்ளி பித்தளை சிலைகளாக, கட்டிடங்கள் வீடுகள் தோப்பு துறவுகளாக, வைர மாலைகளாக, தங்கச் சங்கிலிகளாக, முத்து நகைகளாக வைடூரியக் கற்களாக, பட்டு பீதாம்பரங்களாக, இன்னும் எண்ணற்ற விதங்களாக, முடக்கி வைக்கப்பட்டிருக்கின்றது.

இவையேயன்றி மடங்கள் என்ற பெயர்படைத்த இடங்களில் வேறு ஏராளமான சொத்து தேங்கிக் கிடக்கிறது.

இந்த சொத்துகளிலிருந்து கிடைக்கும் ஓர் ஆண்டு வருவாய் மட்டும் மூன்று கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய்.

இது கூட முழு உண்மை அல்ல. இந்த சொத்துகளை ஆளும் உரிமை படைத்த 'உத்தமர்கள்' தந்துள்ள கணக்கு இது! ஆனால் உண்மையில் கிடைக்கும் வருவாய் இதைவிட இன்னமும் இரண்டு அல்லது மூன்று மடங்காவது இருக்கும். ஏனெனில் கோயில் பெருச்சாளிகள் தம் சொந்தத்திற்குச் சுரண்டியதுபோக மிச்சம் காட்டும் கணக்குத்தானே இது!

இதோ பாருங்கள் எத்தனை எத்

தீன கோயில்களிலும் மடங்களி டல் நடந்திருக்கிறது என்பதைக் லும் எவ்வளவு எவ்வளவு சுரண் காட்டும் பட்டியல் :—

கோயில்களும் மடங்களும் ; தகாவழிச் செலவுகளும், கையாடல்களும், விரயங்களும்

கோயில்—மடம் பெயர்	தொகை
விசாகப்பட்டிணம் ஜில்லா	
லட்சுமிநாராயணசாமி மடம் சபை பள்ளி ...	5,000—0—0
ராதா காந்தசாமி மடம் ஜலந்தரப் பேட்டை....	3,500—0—0
சுப்ரமணியசாமிநிதி சுப்ரமணியபுரம்	3,500—0—0
கோயில் ...	3,000—0—0
,, ,, ,,	
ஜகன்னாதசாமிகோயில், பாலகொண்ட ...	6,500—0—0
வீரபத்திரசாமி கோயில், ராஜய்யப்பேட்டை...	4,500—0—0
கி. கோதாவரி ஜில்லா	
வீரவேங்கிடசத்தியநாராயணகோயில் அன்னவரம் ...	10,000—0—0
லட்சுமிநரசிம்மசாமி கோயில் அந்தர்வேதி ...	30,000—0—0
மேற்குக் கோதாவரி ஜில்லா	
கேசவசாமி மகாலட்சுமி கோயில் நலனுக்கு ...	3,000—0—0
கிருஷ்ணா ஜில்லா	
லட்சுமி நரசிம்ம கோயில், சிங்கம்பாலம் ...	4,116—10—6
சித்தூர் ஜில்லா	
ஹதிராம்ஜி மடம், திருப்பதி ...	1,79,249—3—6
பெல்லாரி ஜில்லா	
சிந்தாமணிசாமி மடம், கௌரிபுரம் ...	6,030—0—6
வீரசக்தி மடம், புருசிப்பேட்டை ...	4,800—0—0
கர்னூல் ஜில்லா	
புக்க ராமேஸ்வர சாமி கோயில், காள்வா ...	5,410—0—0
செங்கற்பட்டு ஜில்லா	
நரசிம்மசாமி கே. யில் தேசாந்திரி கட்டளை சிங்கபெருமாள் கோயில்	8,000—0—0
வரதராஜபெருமாள் கோயில், சூணம்பேட்டை ...	12,714—0—0
தென் ஆற்காடு ஜில்லா	
திருமூலநாகசாமி கோயில், காமங்குடி ...	3,500—0—0
வரதராஜபெருமாள் கோயில் கம்மங்குடி ...	3,200—0—0
தஞ்சை ஜில்லா	
சுவர்க்கபுரம் மடம்	15,000—0—0 26 ஏக்ரா நிலம்.
சுப்ரமணியசாமி கோயில் நிதி ...	3,300—0—0
திருவாவடுதுறை மடம்....	1,00,000—0—0
தர்மபுர ஆதீன மடம்	15,000—0—0
ரத்தினகிரிஸ்வரர் கோவில் நிதி திருமருங்கல் ...	20,000—0—0
கவுநிதீஸ்வரர் கோயில் சிக்கில்	20,000—0—0

(7-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

படிக் கூறினால், கூறுபவர், அருளுருவான ஆண்டவன் என்ற பெயருக்கு ஏற்றவர் ஆகவும் மாட்டார்,

எனவேதான் நாம் கூறுகிறோம். இந்த சொத்துகள் முழுவதையும் சர்க்காரே தம் நேரடி நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்து, நச் சொத்துகளில் ஒரு சிறு பகுதியை கோயில் வழிபாட்டுப் பணிக்காக ஒதுக்கி வைத்துவிட்டு, மிச்சத் தொகை முழுவதையும் ஆஸ்பத்திரி அமைப்பு, கல்வி நிலையங்கள் நிறுவனம் முதலிய தூய்மை சேர் தொண்டுகட்குப் பயன்படுத்தலாம் என்று!

எதிர்ப்பு இருக்காதோ இதற்கு என்று கேட்கலாம் சர்க்கார்! இருக்கும்! கோயில் பூனைகள் கொக்கரிக்கத்தான் செய்யும்! பஞ்சாங்கம் ஏந்திகள் போர்ப்பரணி பாடத்தான் செய்வர்! மடத்துப் பெருச்சாளிகள் விட்டோமே பார் இந்த சர்க்காரை என்று சீறிப் பாய்த்தான் செய்யும். எனவேதான் நாம் முதலிலேயே கூறினோம் இந்த அரும்பணி புரியவேண்டுமானால் ஆட்சியாளருக்கு ஒருதுளி தைரியம் தேவை என்று!

செக்கோஸ்லாவாகியா என்ற ஐரோப்பிய நாட்டில், அந்த நாட்டு ஆட்சியாளர்கள், சென்ற இரண்டு மாத காலத்தில், இத்தகு பணியினைத்திறம்படச் செய்து முடித்திருக்கின்றனர்—அதனால் அந்த நாடு அடைந்த பயன் பெரிது—மிகப் பெரிது.

அங்கேயும் மத குருக்கள் 'முரண்டு' பண்ணத்தான் செய்தனர். இங்கேயும் அதுபோலப்புரோகிதர் கூட்டம் பிடிசாபம் என்று சபிக்கத்தான் செய்யும்.

அங்கே அவர்கள் அடக்கப்பட்டனர். அதுபோலத்தான் இங்கேயும் இவர்கள் அடக்கப்பட வேண்டும்—நாடு நலம்பெற வேண்டுமானால்!

ஒரு துளி தைரியம், சிறிதளவு பகுத்தறிவு! இவ்விரண்டும் இருந்தால் ஆஸ்பத்திரிகள் அமைப்பது மட்டுமல்ல, வேறு நற்பணிகளும் எவ்வளவோ செய்யலாம் சென்னை சர்க்கார்.

செய்யுமா? செய்யும் துணிவு உண்டா? அல்லது இதுபோலவெல்லாம் செய்யவேண்டும் என்று கூறிடுபவர் மீது சீறி விழுவதோடு தன் கடமை தீர்ந்ததெனக் கருதுமா?

★ போர்வாள் ★

திருவள்ளுவர் ஆண்டு 1980 கார்த்திகை 11
26—11—49 சனிக்கிழமை

மாவீரர் வ. உ. சி. யின் மகத்தான குற்றங்கள்!

மாவீரர் வ. உ. சி. மறத்தமிழ்க்குடியிலே பிறந்த மாபெருந் தலைவரேறுதான். என்றும் அவருடைய நினைவுநாள் பற்றி இந்துவும் மித்திரனும் எக்ஸ்பிரசும் தினமணியும் ஆநந்தவிகடனும் ஏனைய பல ஆரிய ஏடுகளும் ஓர் எழுத்துக்கூட எழுதவில்லை. ஆம்! ஓர் எழுத்துக்கூட எழுதவில்லை.

கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனார் செய்த புரட்சி பலம் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே நடுநடுங்கச் செய்தது என்பது உண்மைதான். ஆனாலும் அவருடைய அருமைத் திருநாள் வந்துற்றபோது அதுபற்றி வாய்திறந்து ஒரு வார்த்தை பேசவும் மறந்துவிட்டனர் தேசீயத் தலைவர்கள்! ஒரு வார்த்தை பேசவும் மறந்துவிட்டனர் தேசீயத் தலைவர்கள்!

பாண்டிநாடு அளித்த பத்தரை மாற்றுத் தங்கம் வ.உ.சி வெள்ளையர் ஆட்சி என்னும் எஃகுக் கோட்டையின் அடிப்படைப் பகுதியாகிய வாணிபச் சுரண்டல்மீது வெடிகுண்டை வீசி எறியும் வீரமும் தீரமும் வாய்ந்தவராய் விளங்கியிருந்ததெல்லாம் உண்மைதான். இருந்தாலும் அவருடைய மறைவுநாள் இங்குற்றபோன்று இந்திய நாட்டு வானொலி நிலையம் வாய்மூடி மௌனியாகி சிதம்பரனாரை மறந்துதான் இருந்தது. உண்மை! அது வாய்மூடி மௌனியாகி சிதம்பரனாரை மறந்துதான் இருந்தது.

இருபது ஆண்டுகள் அந்தமான் சிறைவாசம் உமக்கு என்று சொல்லக் கேட்டபோது எத்தகைய கலங்காத உள்ளமும் கலங்கிக் கண்ணீர் வடித்துத்தான் இருக்கும். ஆனால் அஞ்சாத நெஞ்சுபடைத்த அந்த ஆற்றலரசர்—அறப்போர்த் தளபதி — தென்னாட்டுத் திருவிளக்கு வ. உ. சி அந்தக் கொடுமையிற் கொடிய அறக்கொடிய தண்டனையைக் கேட்டபோதும் புன்முறுவல் பூத்த முகத்துடனே சிறைக் கோட்டம் புகுந்தாரே, அந்த வீர வரலாறு தமிழர்க்கோர் புதியபுறநானூறு. என்றாலும் என்ன? இங்குள்ள சர்க்காரும் பிறரும் அவருக்கோர் நினைவுச் சின்னம் நாட்டவும் மறந்துவிட்டனர். வெட்கம்! அவருக்கோர் நினைவுச்சின்னம் நாட்டவும் மறந்துவிட்டனர்.

மாமலைபோல் உறுதியும், அலைகடல்போல் அறிவு அழகும், அட்லேறுபோல் நெஞ்சமும், முழு நிலாப்போல் தண்ணென்ற தன்மையும் படைத்தவராய், வேறொருவரும் செய்திராத வீரப் புரட்சியை விளைத்தவராய், தனக்கு ஒப்பாரும் மிக்காரும் அற்றவராய், ஓங்கு புகழ்ச் சிறப்புகள் அவ்வளவும் தன் காலடியிலே வந்து விழவேண்டிய அளவு அரிதினும் அரிய மிக அரிய வாழ்க்கை வாழ்ந்த அண்ணலாய் இருந்தும், சிதம்பரனாரை, இந்த ஆரிய ஏடுகளும் அகில இந்திய வானொலியும் அடியோடு மறந்தனவே, ஏன் தெரியுமோ?

வ. உ. சி. ஒரு குற்றவாளி! அவர் இருபெரும் குற்றங்கள் புரிந்திருக்கிறார்!

சாதாரண குற்றங்கள் அல்ல! மன்னிக்க முடியாத குற்றங்கள்! மகத்தான குற்றங்கள்!

இத்தகு குற்றங்கள் புரிந்தவர் வ. உ. சி. எனவேதான், தேசீயக் கவிஞர் பாரதியார் நினைவு நாள்வந்தபோது, பக்கம் பக்கமாகப் படங்கள் போட்டு அழகழகாகச் சித்திரங்கள் தீட்டி, அடுக் கடுக்காக வார்த்தைச் சுவர்களைக் கட்டி வானளாவ அவரைப் புகழ்ந்த ஏடுகள், பண்டித நேருவின் பிறந்த நாள் வந்தபோதும் அதுபோலவே ஆகாயத்திற்கும் பூமிக்குமாக ஆநந்தத்தால் துள்ளிக் குதித்துத் துதிபல பாடி ஆஹாஹா என ஆர்ப்பாட்டம் புரிந்த ஏடுகள், சர்தார் படேல் ஜன்ம தினம் வந்த போதும் இரும்பு மனிதர், எஃகு உள்ளம், ஒப்பற்ற தலைவர், ஓராயிரம் புகழ் படைத்தவர் என்றெல்லாம் உடுக்கை அடித்து வாழ்த்துரைகள் வாசித்து பரத நாட்டியமாடிய ஏடுகள், வீர சிதம்பரத்தின் தீரத் திருநாள் உற்றபே தும்மட்டும் ஓர் எழுத்து எழுதவும் மனமின்றி ஒரு வார்த்தை பாராட்டவும் கையின்றி முழு மோன நிலை கற்கும் முனிவர் போல் மௌனம் சாதித்துவிட்டன! வானொலியும் இந்த ஏடுகளின் வழியையேதான் பின்பற்றிவிட்டது.

அப்படி யென்ன குற்றம் புரிந்து விட்டார் வ. உ. சி. இந்த ஏடுகளாலும் வானொலியாலும் வெறுத்து ஒதுக்கப்பட

(8 பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

அமாவிப் பெருமாள் கோயில், தேரழுந்தூர்...	3,000—0—0
பசுபதீஸ்வரர் கோயில், பந்தநல்லூர் ...	9,000—0—0 (ஆண்டுதோறும்)
வரகூர் கோயில்கள்	6,000—0—0
வேதாரண்யேஸ்வரர்	16,000 ஏக்ரா நிலத்திற்கு ஆண்டு வருமானம் ரூ. 75,000 தான் காட்டப்படுகிறது. கணக்குப் பதிவு கிடையாது குன்னத்தூர் கிராமத்தில் நூற்றுக் கணக்கான கலம் நெல் மோசடி.
மதுரை ஜில்லா	
மூங்கிலணி காமாட்சியம்மன் தேவதானப்பட்டி ...	10,575—0—0
கோபிநாகசாமி கோவில், காமாட்சிபுரம் ...	5,000—0—0
மதுரை தேவஸ்தானம் புட்டுத்திருவிழா கட்டளை ...	5,000—0—0
திருநெல்வேலி ஜில்லா	
மந்திய சந்தானசாமி கோயில், தாரகாபுரம் ...	3,000—0—0
சுப்ரமணியசாமி கோயில் திருப்பணிக் கட்டணம், வள்ளியூர்	5,000—0—0 நிலம் ஆக்ரமிப்பு
கோவை ஜில்லா	
தருநாதசாமி கோயில், புதுப்பாளையம் ...	4,000 முதல் 5,000 வரை
மாரியம்மன் கோயில், காவலூர் அவனாசி ...	5,500—0—0
மலையாள ஜில்லா	
கள்ளிக்கோட்டை ஜாமரின் நிர்வாக கோயில்கள் 28 ...	6,000—0—0
திருமன்னன்கொண்டு கோயில், அங்காடிபுரம் ...	13,000—0—0

குறிப்பு :—ரூ. 3000-க்கு மேற்பட்டு தகாவழி செலவு-மோசடி செய்த கோயில்கள் மடங்களின் விவரம் மாத்திரம் மேலே தரப்பட்டுள்ளது. இத்தொகைக்குக் குறைந்ததும், நில ஆர்ஜிதம், சொத்துக் கொதுவை குத்தகை குறைப்புக் கணக்கு, கால் நடை சந்தை கட்டணவசூல், மற்றவகை விழா வருவாய், சந்தைப்படி கணக்கு; நகைகள் நிலம் விற்பனை ஆகியவைகளில் மோசடி நடத்திய கோயில்களும் மடங்களும் வேறு தனிபாக இருக்கின்றன.

இது, சர்க்காரே தந்துள்ள கணக்கு—நம்முடைய சொந்தத் தயாரிப்பு அல்ல, சர்க்காருடைய பார்வைக்குக் கிட்டிய மோசடிகளே இவ்வளவு என்றால், இவர்களுடைய கண்காணிப்புக்குச் சிக்காத மோசடிகள் இன்னும் எவ்வளவு இருக்குமோ, யார் கூற முடியும்?

மோசடி செய்யப்பட்டுள்ள சொத்துகளின் தொகையே இவ்வளவு எனறால், மொத்தம் கோயில்களுக்கும் மடங்களுக்கும் இருக்கும் சொத்துகளின் மதிப்பு எவ்வளவு இருக்கும்! ஒரு கணம் எண்ணிப் பாருங்கள்!

இவ்வளவு சொத்துகளும், இன்று; ஆண்டவன் பெயரால், அவருக்குத் திருப்பணி செய்கிறோம் என்ற திருட்டுப் பெயரால், ஆறுகால பூசையும் அந்தி சந்தி படையலும் வேண்டும் ஆண்டவனுக்கு என்ற குருட்டு நம்பிக்கையின் பெயரால், வீணுக்கு இறைக்கப்படுகின்றன. எல்லாம் வல்ல ஆண்டவன், இந்த சொத்துக்கள் உட்பட எல்லாவற்றையும் படைத்த ஆண்டவன், நம்மிடமிருந்து இந்தச் சில்லறைப் படையல்களைப் பெற்றுதான் உண்டு மகிழவேண்டும் என்ற பரிதாபநிலையில் இருப்பவர் அல்லர். எனவே அவருக்கு உணவு பரிமாறுவதாக நாம் கூறுவது வெறும் பித்தத்தின் முதிர்ச்சியே தவிர வேறில்லை. எனவே இந்த வீண் செலவுகளையும், வெறும் கேளிக்கைத் திருவிழாக்களையும் நிறுத்திவிட்டால் ஆண்டவன் ஒருபோதும் கோபித்துக் கொள்ள மாட்டார். அதிலும் அவர் பெயரால் உள்ள சொத்துக்களை, சூதுமதியினர் பலர் தம் சொந்தத்திற்கென்று சுருட்டிக் கொள்வதையே கூட நிறுத்த மனம் இன்றி வாளா இருக்கும் அவர், அந்த சொத்துக்களை அந்த சுக போகிகளிடமிருந்து கைப்பற்றி, ஆஸ்பத்திரி வைப்பது என்ற உன்னதமான நோக்கத்திற்குப் பயன்படுத்தினல் கோபித்துக் கொள்ளவா செய்வார்? நம் சொத்து நம்முடைய பிள்ளைகளின் பிணிபோக்கத்தானே பயன்படுகிறது, இது நல்லதுதானே, வீணாக முடங்கிக் கிடப்பதும் வீணர்தம் வீட்டுச் செலவுக்கும் வீண் டம்பத்துக்கும் விரையமாவதும் என்ற நிலையில் கிடந்து நலிவதை விட இது போன்ற உயரிய பணிக்கு உதவுவது எவ்வளவோ சிறந்த செயல் முறை அல்லவா என்றுதான் ஆண்டவன் எண்ணிக் களிப்புறுவாரே தவிர, நம் சொத்து நம் பிள்ளைகளின் நோய் தீர்க்கும் பணிக்கா பயன்படுவது—செச்செ—என்ன அக்கிரமம் என்று ஒருநாளும் கூறவும் மாட்டார், அப்

(5-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

செலுத்திப் பார்த்தோம். என்றாலும் பலனில்லை, விலைவாசிகள் குறையவில்லை!"

மீண்டும் கேட்டார் அப்துல் மஜீத்:—"விலைவாசிகளைக் குறைக்க எம்மால் ஆகவில்லை என்று சர்க்காரே இப்படிக் கையை விரித்து விட்டால், பிறகு, ஏழைமக்கள் என்ன தான் செய்வது, எப்படித்தான் வாழ்வது?"

சட்டென்று எழுந்து வெட்டென்று பதில் கூறினார் கனம் அமைச்சர்: "என்ன செய்வது, கஷ்டம்தான். பொறுத்துக் கொள்ள வேண்டியது தான். முயற்சி பலன்தரவில்லை இனி நாங்களென்ன செய்யமுடியும். இந்த நிலை துரதிர்ஷ்டமானது தான். என்றாலும் இந்த நிலை இன்னும் சிலகாலத்துக்காவது இருக்கத்தான் செய்யும்."

எப்படி இருக்கிறது பார்த்தீர்களா எழில்மிகு அமைச்சர் பேச்சு! முயற்சிசெய்து பார்த்தாலும்—முடிவில் பலன் இல்லையாம்! கடமையைச் செய்து விட்டாராம் — இனி ஏதும் செய்வதற்கில்லையாம்! என்னென்னவோ செய்துவிட்டாராம்—என்றாலும் விலைவாசிகள் இறங்கி வரவில்லையாம்! பரிதாபம், பரிதாபம்! இந்த நிலையில், இப்படிபட்ட இவர்களுடைய ஆட்சிதான் ஒப்பற்ற ஆட்சி என்று பெருமை வேறு பேசிக் கொள்ளுகிறார் இந்தக் கனம் கோபாலர். ஏன்தானோஇப்படிப் பேசிவிடுகிறார் இந்த அமைச்சர் — நல்லறிவாளர்கள் கைகொட்டி நகைக்கிறார்களே இவர்தம் போக்குகண்டு!

என்னைப்போன்ற சிறந்த ஓவியன் யாருண்டு தரணியில் என்று ஓயாமல் தற்பெருமை பேசிய கண்ணன், கோவிந்தன் கொடுத்த ஓவியத்தைப் போடத் தெரியாமல் திண்டாடித் திகைத்து—பிறகு, போடத்தான் முடியவில்லை, ரொம்பக் கஷ்டமான ஓவியம், எவ்வளவு முயன்றாலும் உருவாக மறுக்கிறது, என் செய்வேன் இறைவா கச்சி ஏகம்பனே என்று சலிப்புச் சிந்து இசைத்தாற் போலத்தான், எங்களைவிடச் சிறந்த ஆட்சியாளர் எவர் இருக்கமுடியும் என்று வீரம்பேசிய தீரர் கோபாலனாரும், இப்போது, முயற்சித்தேன் — முடியவில்லை, இறக்கப் பார்த்தேன் — இறங்கவில்லை, குறைக்க முயன்றேன்—குறைய மறுக்கிறது, விலைவாசிகாள் தாழ்ந்திடுமின் என்றேன் —தாழ்வதா குறைவதா அதுதான் முடியாது என்றுரைத்துவிட்டன என்றெல்லாம் சோகமான தூரலில் சட்டசபையில் பேசத் தொடங்கிவிட்டார். ஓவியக் கண்ணனுக்கும் அமைச்சர் கோபாலருக்கும் அப்படி ஒன்றும் அதிக வேறுபாடு இல்லை! கிட்டத்தட்ட இருவர் நிலையும் ஒரு நிலைதான்!

"என்னென்னவோ செய்து பார்த்தோம்—விலைவாசிகள் இறங்க மறுத்து விட்டன" என்று தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் பேசியிருக்கிறாரே திருவாளர் கோபாலர், இதற்குப் பொருள் என்ன தெரியுமோ—நாங்கள் கையாலாகாதவர்கள் என்பதுதான்!

மடமடவென உயர்ந்து செல்லும் விலைவாசிகளை எவ்வளவோ முயன்றும் இறக்க முடியவில்லை ஒரு சர்க்காரால் என்றால் அந்த சர்க்காருக்கு ஆளத்தெரியவில்லை என்பது மட்டுமல்ல அதிலிருந்து ஏற்படும் உண்மை, அவர்களுக்கு இனி ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்க ஒரு சிறிதும் உரிமை கிடையாது என்னும் உண்மையும் தான் நன்கு புலனாகிறது.

என்னதான் ஆட்சிக் கலையின் அரிச்சுவடியும் அறியாதிருந்தாலும், அதற்காக, நாங்கள் கையாலாகாதவர்கள்தான் என்று இவ்வளவு வெளிப்படையாகவா ஓர் அமைச்சர் பேசுவது? இவ்வளவு வெளிப்படையாகவா?

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய அளவுக்கு என்கிறீர்களா?

இதோ பாருங்கள் அவர் இழைத்த குற்றங்களை—மன்னிக்க முடியாத மாபெரும் குற்றங்களை!

1. அவர் வட நாட்டவராகப் பிறக்காமல் தென்னாட்டவராகப் பிறந்து விட்டார்.

2. அவர் ஆரியராகப் பிறக்காமல் திராவிடராகப் பிறந்து விட்டார்.

ஆம்! இந்த இரு பெருங் குற்றங்களைப் புரிந்தவர், வ. உ. சி. எனவேதான் பாரதியாரையும் பண்டிதரையும் 'படேல்ஜி'யையும் பாராட்டிப் பாராட்டிப் புகழ்ந்துரைத்துத் தொழுது வணங்கிய ஆரிய ஏடுகளும் அகில இந்திய வானொலியும் வ. உ. சியைப் பற்றிப் பேச மறந்து விட்டன—இல்லை மறுத்து விட்டன.

"நியாயமே வடிவாக" வந்த அந்த ஏடுகளும், வானொலியும் குற்றம் புரிந்தவரை எப்படிப் பாராட்டும் பாவம்! பாராட்டாமல்தான் இருக்கும்! பாராட்டவில்லையே, பாராட்டவில்லையே, என்று நீங்கள் ஏன் குறைபட்டுக் கொள்ளுகிறீர்கள்!

திராவிட முன்னேற்றக்கழகம்

வந்தவாசி

26—11—49 சனிக்கிழமை மாலை 5-30 மணிக்கு வந்தவாசி யூனியன் ஆபீஸ் பின்புறமுள்ள மைதானத்தில் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெறும்.

தலைவர்:

தோழர் ஈ. தங்கவேலர்.

பேச்சாளர்கள்:

கே. ஏ. மதியழகன், B. A.

ம. இளஞ்செழியன், B.A.(Hons)

இப்படியுமா பேசுவது? இப்படியுமா?

"எனக்கு ஈடு இணையார் இருக்கிறார்கள் இத் தமிழகத்தில்? என்னுடன் போட்டி போடக்கூடிய ஆற்றலும் தைரியமும் எவருக்கு இருக்க முடியும்? என்னைவிடச் சிறந்த முறையில் சித்திரங்கள் தீட்டவல்லார் ஏது இத் தமிழ்த்தரணியில்? நான் ஓவியங்கள் தீட்டினால், அவற்றிலே அழகு ததும்புமே, கலை மணம் கமழுமே, தமிழ்ச்சுவை ஊற்றெனப் பெருக்கெடுத்து ஓடுமே, இன்னதென்று எடுத்துரைக்க இயலாததோர் ஜீவ சக்தி துள்ளி விளையாடுமே, வேறு யாருடைய ஓவியத்தில், இது போலவெல்லாம் எழிலும் இன்பமும் தவழ முடியும்? எவருடைய எழுதுகோல், என்னைப் போல உயிருள்ள சித்திரங்களை உணர்ச்சியின்பிம்பங்களாக உருவாக்கிக் காட்ட முடியும்? கிடையாதப்பா கிடையாது, இந்தத் தமிழகத்திலே மட்டுமல்ல, இந்தப் பரந்த இந்திய பூபாகத்திலேயே என்னுடன் நேருக்கு நேர் நின்று பேசக்கூடிய ஓவியப் புலவன் வேறொருவன் கிடையாது"

கண்ணன், இதுபோல, அடிக்கடி தற்பெருமைப் போர்முரசு கொட்டியபடி இருந்தான். இந்த வீண் புகழ்ச்சி வெண்பாவைக் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன கோவிந்தன் ஒரு நாள் கண்ணனைப் பார்த்து, "கண்ணா! நீ ஏதோ பெரிய ஓவியன்—ஒப்பற்ற ஓவியன்—ஈடு இணை காட்டமுடியாத ஓவியன் என்றெல்லாம் சொல்லிக்கொள்கிறாயே! ஏதோ பார்க்கலாம், இதோ இந்தப் பத்திரிகையின் மேலட்டையில் போட்டிருக்கிறதே இருநிற ஓவியம், இதுபோல ஒன்றைப் போடு பார்ப்போம்!" என்று அறைகூவி அழைத்தான் கண்ணனை. உடனே, கண்ணன், "சே! இதென்ன பிரமாதம்! இதோ ஒரு நொடியில் போட்டுக் காண்பிக்கிறேன் பார்" என்று கூறிக்கொண்டே, தீட்டுகோல், மை, வண்ணக் கலயம், தாள், இவற்றை வைத்துக் கொண்டு, ஓவியம் தீட்டத் தொடங்கினான். ஒரு படம் உருவாக்கினான்—அகோரக் காட்சி தந்தது அது—கிழித்தெறிந்தான்—வேறொன்று எழுதினான், அது முன்னிலும் மோசம்—தூள் தூளாயிற்று தாள்—மறுபடியும் ஒன்று எழுதினான், அதுவும் பழைய படத்தின் கதியையே அடைந்தது—பிறகு, மற்றொன்று, வேறொன்று இன்னொன்று, மறுபடியும் ஒன்று என்று எழுதிக் கொண்டே இருந்தான். ஒன்றும் உருவான பலன் அளிக்கவில்லை. ஓவியக் கலைக்கும் அவனுக்கும் வெகுதூரம் என்பது அருகிருந்து அவனைக் கவனித்துக் கொண்டிருந்த கோவிந்தனுக்கு நன்றாகப் புலனாகி விட்டது.

"என்ன கண்ணா, ஓவியம் போட்டுவிட்டாயா?"—கோவிந்தன் கேட்டான்.

போட்டுப் போட்டுப் பார்த்தேன், வரவே மாட்டேன் என்கிறது நீ குறிப்பிட்ட ஓவியம். செச்சே! ரொம்பக் கஷ்டமப்பா அந்த ஓவியம் போடுவது!"—கண்ணன் பதில் கூறினான்

"இந்தச் சாதாரண ஓவியத்தைப் போடுவதற்கே இப்படித் திண்டாடித் திண்டாடித் திகைத்து நின்று தேம்பியழும் நீயா இந்த இந்தியக் கண்டத்திலேயே ஈடு இணையற்ற ஓவியன் நான் என்று ஜம்பம் பேசினாய்—அட, வெறும் பேச்சுக்கார வீணனே!" என்று குத்திக் காட்டிக் கேலி பேசினானில்லை கோவிந்தன் ஆனால் அவன் மனதிலே அந்த வாசகங்கள் தான் உலவிடலாயின! எப்படி, உலவாமல் இருக்கும்?

எங்கே நடந்தது இந்த நிகழ்ச்சி என்கிறீர்களா? சென்னை சட்டசபையில்! யார் அந்தக் கண்ணன் என்று தெரிய வேண்டுமா? கனம் கோபாலர்! கோவிந்தன் யார் என்று கேட்கிறீர்களா? ஜனாப் அப்துல் மஜீத்!

சட்ட சபையிலே, கனம் கோபாலர், எங்களைப் போன்ற நல்லாட்சியாளர் வேறு யார் இருக்கமுடியும் என்று கூறாத நாள் கிடையாது. தற்புகழ்ச்சித் திருப்பாசுரம் வாசிக்காத நேரம் கிடையாது. ஒவ்வொரு முறை அவர் பேச எழுந்திருக்கும் போதும், தங்கள் காங்கிரஸ் மந்திரிசபை மிகச்சிறந்த முறையில் நாடாளும் நற்பணியை நாள்தோறும் புரிந்து வருகிறது என்றும், வேறு எந்தக் கட்சி நாடாளவந்தாலும் தன் சொந்தக் கட்சியை விடச் சிறந்த முறையில் ஆட்சிபுரிவது என்பது அணுவளவும் ஆகாத அரும் பெரும் காரியம் என்றும் சொல்லிவிட்டுதான், பிறகு, அவர், வேறு சேதிகளைப் பற்றி விவரம் உரைக்கத் தொடங்குவது வாடிக்கை.

இந்தச் சென்னை மாகாணத்தை ஆட்சி புரிவதற்கென்றே 'ஆண்டவன்' அருள்கூர்ந்து இவர்களைப் "படைத்தா"ரோ என்னவோ அது நமக்குத் தெரியாது—ஆனால் கனம் கோபாலர் கருத்து அதுபோன்றது

தான் என்பதுமட்டும் நமக்கு மிக நன்றாகத் தெரியும். அவருடைய சட்டசபைச் சொற்பொழிவுகள் அந்தப் பாணியில் தான் எப்போதும் அமைந்து கிடக்கும்.

காருண்யம் மிக்க காங்கிரஸ் அமைச்சர் கனம் கோபால் ரெட்டியார் கருணை கூர்ந்து கழறுவது போல, காங்கிரஸ் ஆட்சியை விட நல்லாட்சி வேறு இருக்க முடியாது என்பதும், இவர்கள் ஆட்சிதான் சிறந்த ஆட்சி—ஒப்பற்ற ஆட்சி—உயரிய ஆட்சி—ஈடு இணையற்ற ஆட்சி என்பதும் மெய்யானால், இவர்கள் நாடாளும் நல்ல தம்பிகளாக இருக்கும் இந்த "நன்னு"வில், நாட்டில், சுகம் ததும்ப வேண்டும். சுபிட்சம் ஒளி வீச வேண்டும். மக்கள் மன்றத்தில் இன்பம் எக்களிக்க வேண்டும். எல்லோருடைய உள்ளத்திலும், திருப்தி, தவழ வேண்டும்; இன்பம் திருநடம் புரிய வேண்டும். மகிழ்ச்சியும் மனமோகன கீதமும் காற்றிலே கலந்து வரும் நாதமாக இருக்கவேண்டும். வறுமை குறைந்து, வாட்டம் மறைந்து, துக்கம் துடைக்கப்பட்டு, ஏக்கம் இல்லாமல் செய்யப்பட்டு, எங்கும் களிப்புச் சிந்து இசைக்கப்படும் நிலை உருவாக வேண்டும். ஒரு நாட்டிலே நல்லாட்சி நிலவுகிறது என்றால், இந்தத் திருப்தி மனப்பான்மையும் மகிழ்ச்சி வெண்பாவும் அந்த நாட்டிலே இருந்தாக வேண்டும். இருந்தால்தான், அந்த நாட்டிலே நல்லதோர் ஆட்சி நின்று நிலவுகிறது என்பதற்குப் பொருளுண்டு.

இந்த நாட்டிலே நடப்பது நல்லாட்சி தான் என்கிறார் கனம் கோபாலர். அதிலும் இதனினும் சிறந்த ஆட்சி வேறு இருத்தல் முடியாது என்றும் கூறுகிறார். அப்படியானால் இங்கே, இன்பம் தவழவேண்டுமே, தவழ்கிறதா?-இல்லை! மகிழ்ச்சி மலர்ந்திருக்க வேண்டுமே, மலர்ந்திருக்கிறதா—கிடையாது. திருப்தி இருக்க வேண்டுமே, இருக்கிறதா—இல்லை! பசி, பட்டினி, பஞ்சம், இல்லாமை, போதாமை இவைதான் நிறைந்திருக்கின்றன நாட்டில்! தொழிலாளர் உலகு இங்கு, வறுமையின் தொட்டிலாக இருக்கிறது. மத்தியதர வகுப்பினர் வாழ்க்கையோ பாலைவனத்துப் பயணமாக இருக்கிறது. உழவர் தரணியிலும், துன்பம், துந்துபி பாடியபடி இருக்கிறது. ஆரம்ப ஆசிரியர்களோ மனைவி மக்களைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய அளவுகூட வருவாய் இன்றி வதைந்தபடி இருக்கின்றனர். தமிழாசிரியர்களோ, அடிக்கடி துக்கவாரம் கொண்டாடுகிறார்கள்—அவ்வளவு சோகம் கப்பிக் கொண்டிருக்கிறது அவர்கள் வாழ்க்கையில். சிறைச்சாலைகளையோ சர்க்கார் விரிவாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்—அடக்கு முறையின் வேகம் எவ்வளவு வேகமாக அதிகரிக்கிறது என்பதற்கான அடையாளச் சின்னம் அந்த 'விஸ்தரிப்பு'! வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு புறம் ஆயிரமாயிரவரை ஆட்டிப் படைத்தபடி இருக்கிறது. வேலையிருந்தும் போதிய கூலி இல்லாக் 'கொண்டாட்டம்' ஒரு புறம் ஏழை மக்களின் கூட்டத்தை வறுமை யென்னும் குறுந்தடி கொண்டு வன்மையாகத் தாக்கியபடி இருக்கிறது. வெளிநாட்டிலிருந்து வாங்கப்படும் கடன் தொகையோ ஏறிக் கொண்டே இருக்கிறது. உள்நாட்டில் சர்க்காருக்கு உள்ள எதிர்ப்போ வளர்ந்துகொண்டே இருக்கிறது. 144-ம், 153-ம், 123-ம், பாதுகாப்புச் சட்டமும் கிரிமினல் சட்டமும் ஏனைய பல சட்டங்களும் அடிக்கடி மக்கள் மன்றத்தின் மீது பாணங்களை வீசியபடி இருக்கின்றன. இன்றியமையாத பொருள்களின் விலையோ விஷம்போல ஏறிவிட்டிருக்கிறது—மேலும் மேலும் விலைகளின் உயரம் அதிகமாகிக் கொண்டே போகிறது.

விலைகள் உயர்ந்துகொண்டே போகின்றன—ஆனால் மக்கள் மன்றத்தில் உலவும் பணமோ தினம் தினம் குறுகிக் கொண்டே இருக்கிறது. அதிகரிக்கும் விலைவாசி! குறுகிக் கொண்டிருக்கும் மணிபர்ஸ்! விளைவு என்ன ஆகும் என்று கூறவும் வேண்டுமா? பொருளாதார நெருக்கடி உடனே ஏற்படும்! ஆம், அதுதான் இப்போது ஏற்பட்டிருக்கிறது.

இத்தகு விபரீத நிலை நாட்டிலிருக்கும் போது எம்மைப் போல ஆளவல்லார்யாரே உண்டு எவரே உண்டு என்று கனம் கோபாலர்கள் கீர்த்திக் கீதம் பாடிக் கொண்டிருந்தால் எவர் தான் இவர்கள்தம் வீண்பிரதாபவெற்றுரை கண்டு எள்ளி நகையாடாமல் இருக்க முடியும்?

எனவேதான், தோழர் அப்துல் மஜீத் எம். எல். ஏ. இக்கிழமை, சென்னை சட்டசபையில், கனம் கோபாலரைப் பார்த்துக் கேட்டார், விஷம் போல ஏறிவரும் விலைவாசிகளைக் குறைப்பதற்குக் காங்கிரஸ் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்று!

உடனே கூறினார் கனம் கோபாலர்: "எல்லா நடவடிக்கைகளும் தான் எடுத்துப் பார்த்தோம், ஏதேதோ உத்தரவுகளைப் போட்டுப் பார்த்தோம். என்னென்ன செய்ய முடியுமோ செய்து பார்த்தோம். எவ்வளவு ஆற்றல் எமக்குண்டோ அவ்வளவையும் இத்துறையில்

(8-ம் பக்கம் பார்க்க)

தொடர்கதை:

பதினைந்தாம் பகுதி

திருவஞ்சைக் களம்!

மூச்சு விடுவது சிறிது சிரமமாக ருப்பதுபோல் எனக்குத் தோன்றியது.

எங்கெங்கோ சிதறியோடிய உணர்ச்சிகள் ஒவ்வொன்றாக என்னிடம் வந்து சேர்வதாக உணர்ந்தேன்! முகம் ஈரமாக இருந்தது! கை கால்களை அசைப்பதும் கடினமாகத் தெரிந்தது! மெதுவாகக் கண்களைத் திறந்தேன்! ஆவலோடும், அளவிற்கு மிஞ்சிய வருத்தத்தோடும் என்னையே இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்த இசையொலியைக் கண்டேன், புரிந்து கொண்டேன் அவ்வளவு நேரமும் சுய நினைவு அற்று, நான், பிணம்போல் கிடந்தேன் என்பதை!

இசையொலி சிறிது நேரத்திற்குமுன் கூறியவைகள் திடீரென்று என் நினைவிற்கு வந்து, இடியோசைபோல் கர்ஜித்தன! எங்கும் ஒரே பேரிரைச்சல்! நாலா பக்கங்களிலு மிருந்து ஓலத்தின் எதிரொலி! இளவரசர் இறந்தார்—மலர்க் கோதை மடிந்தாள்—பாண்டிய நாடு அழிந்தது — மாறிமாறி இதே சொற்கள் என் காதைத் துளைத்தன! திறந்த விழிகளைத் திரும்பவும் மூடிக் கொண்டேன்! காதுகள் இரண்டையும் கைகளால் இறுக அழுத்திக் கொண்டேன்! அந்தப் பேரிரைச்சலிலிருந்து நான் விடுதலை பெற முடியவில்லை! மறுமுறையும் மயக்கமுற்றேன்!

தூயமணி! நான், வாழ்க்கையின் மூன்றாவது பகுதியில் இருப்பதாக முதலில் கூறினேனே நினைவிருக்கிறதா? பாண்டிய நாடு அழிந்ததோடு-அரச குடும்பத்தினர் மடிந்ததோடு — நானும் குழந்தைகளும் அனாதைகளானதோடு, என் வாழ்வின் முதற்பகுதி முடிவுற்றது!

"ஆரியரின் மாயவலை என்கிறீரே — என்னால் அதனைப் புரிந்து கொள்ளவும், நம்பவும் முடியவில்லையே!" என்று குளிர் பூஞ்சோலையில் நாம் உட்கார்ந்திருக்கையில் நீ கூறினாய் அல்லவா? தம்பி, இப்பொழுது புரிகிறதா: ஆரியரின் மாயவலை என்றால் என்னவென்று? வீராதி வீரர்களாக, எட்டுத் திக்கும் புகழ் பரப்பி வாழ்ந்த பாண்டிய மன்னர்களின் வழிவந்த காவலனின் கதி என்னவாயிற்று? ஏன்? தெளிந்த அறிவும், சூழ்ச்சிக்குப்பலியாகாதிருக்கும் மன உறுதியும், கண்டாலே எதிரிகள் அஞ்சும் வீரமும் கொண்ட இளவரசரின் கோர முடிவிற்குக் காரணம்தான் என்ன? மலர்க் கோதை தற்கொலைக்குள்ளாக வேண்டிய நிலைமை ஏன் வந்தது? யாரால் நேரிட்டது? தூயமணி, இவைகளை யோசித்துப் பார்! நீயே நன்றாகச் சிந்தித்துப் பார்!

பாண்டியநாடு என்னைத் துரத்தியடித்தது! கள்ளத்தனமாக அதனை விட்டு ஓடிவந்தேன். உடைந்த உள்ளத்தோடுதான் அது என்னை விரட்டி அடித்தது! ஆனால், உடைந்த உள்ளத்தை ஒட்டவைக்கவும், வாடி வதங்கிய வாழ்வை மலரச் செய்யவும், ஓவியக் குழந்தைகள் இரண்டைத் தந்து அனுப்பியது! பாண்டிய நாட்டின் கதை இது. ஆனால் என் மூதாதையர் வாழ்ந்த சேரநாடு எனக்குத் தந்தபரிசு, என்ன தெரியுமா தம்பி, முதுகில் ஆறாத பெரிய புண்!

பாண்டிய நாடு தந்தது இரண்டு குழந்தைகள்! சேரநாடு தந்தது முதுகில் புண்!

"பெரிய புண்!—இதுதான் சேர நாட்டு வரலாறு தம்பி!" என்று முதல் முதலாக உன்னை நாம் சந்தித்தபோது கூறினேனே, அந்தப் புண்ணின் வரலாறு இனிதான் ஆரம்பமாகிறது! கேள், நன்றாக உற்றுக் கேள்!

மயக்கம் தெளிந்ததும் எழுந்து உட்கார்ந்தேன். இலையெல்லாம் உதிர்ந்து விட்ட மரங்கள் நிறைந்த தோப்பைப் பார்த்தால் எப்படித் தோன்றுமோ, அப்படித் தோன்றியது, அந்நேரத்தில் எனக்கு இந்த உலகம்! வாழ்வே சுவையற்றுப் போய் விட்டது. ஏன் வாழவேண்டும் என்ற கேள்வியே அடிக்கடி என் உள்ளத்தில் எழுந்தது! குழந்தைகளுக்காக நாம் வாழவேண்டுமென்று இசையொலி கவனப்படுத்திக் கொண்டே இருந்தாள்.

இந்த நிலையில் சில தினங்கள் எப்படியோ கழிந்து போயின! ஒரு நாள் இசையொலி, "இப்படியே எத்தனை நாட்களுக்குத்தான் காட்டிலேயே வாழ்வது! கொடிய விலங்குகளினால் குழந்தைகளுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டால் என்ன செய்வது? நாட்டிற்கு நாம் செல்லலாமே!' என்று கூறினாள்.

"நாட்டிற்கா? எந்த நாட்டிற்கு? சோழனும் ஆரியரும் சேர்ந்து அரசு புரியும் பாண்டிய நாட்டுக்கா?"

"இல்லை! பாழடைந்து விட்ட பாண்டிய நாட்டிற்கு அல்ல! உம் நாடு—சொந்தநாடு—சேர நாடு அல்லவா? அங்கு நாம் ஏன் செல்லக்கூடாது?"

பழைய நினைவுகள் ஒவ்வொன்றாகப் பறந்து வந்தன என்னிடம்!

"எட்டுத் திக்கும் என்புகழ் பரவ வேண்டும்! என்தந்தையை நாடு கடத்திய மன்னன் மாண்டு விட்டான், அவன் மகனாகிலும் என்தந்தைக்குப் பதில் என்னிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும்! சேர நாடுதானே உம் நாடு, தயை கூர்ந்து இங்கேயே வந்து விடுங்கள் என்று சேரமன்னன் சேதனன் என்னைக் கெஞ்ச வேண்டும்! பிறகு நான் சேரநாடு வந்து நிரந்தரமாகத் தங்க வேண்டும்....." இப்படியெல்லாம் முன்பு பற்பல நேரங்களில் எண்ணியது என் கனவனத்திற்கு வந்தது! அந்தக் கனவு எங்கே? இப்பொழுது நடக்கப் போவதென்ன? என்றெண்ணியதும் என் கண்கள் கலங்கின!

"தங்களுக்கென்ன சிறிதும் தைரியமே இல்லை! நடந்து விட்டதையெல்லாம் திரும்பத் திரும்ப நினைத்து வருந்துவதில் ஏதாகிலும் பயனிருக்கிறதா? இனி என்ன நடக்கவேண்டும் — அதனைத் தானே சிந்திக்க வேண்டும்! செல்வச் சிறுவர்களை வளர்த்து, பெரியவர்களாக்கி அவர்களைக் கொண்டு சோழனைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்! அழிவிற்குக் காரணமான ஆரியத்தின் நிழல்கூட பாண்டிய நாட்டில் இல்லாமல் செய்ய வேண்டும்! இதனை மறந்து விட்டீர்களா?"

"இசையொலி! இல்லை! நானா மறப்பேன்!......சோழ நாட்டை எண்ணியதும், என் ஆசையெல்லாம் கானல் நீரானதை நினைத்து வருந்தினேன் வேறொன்றுமில்லை!"

"அப்படியென்றால் சேரநாடு செல்ல வேண்டாமென்கிறீர்களா?"

"வேறு எந்த நாட்டிற்கு நாம் செல்ல முடியும்? சேரநாட்டிற்குத் தானேசென்றாக வேண்டும்!" என்று நான் கூறியதும், இசையொலி பேசாமல் இருந்தாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு, சேரநாட்டிற்கு நாங்கள் புறப்பட்டோம். சேரநாட்டை அடைந்தோம். சேரனின் தலைநகரமான திருவஞ்சைக்களம் என்ற நகரை நாடி நடந்து கொண்டிருந்தோம். திருவஞ்சைக்களத்திற்கு அருகே இருந்த ஒரு சிற்றூரை வந்து சேர்ந்தோம். அங்கே ஒரு குடிசையில் சில தினங்கள் தங்கி இருந்தோம். குழந்தைகள் தத்தித் தத்தி நடக்கத் தொடங்கின! இருண்ட எங்கள் வாழ்வில் விளக்குபோல் பிரகாசத்தைத் தந்தன, அக்குழந்தைகள்!

"இசையொலி, குழந்தைகளைப் பத்திரமாகப் பார்த்துக் கொண்டிரு, நான் திருவஞ்சைக்களத்திற்குச் சென்று வருகிறேன்."

"அந்த அழகிய நகரைக் காண நீங்கள் மட்டுந்தான் போக வேண்டுமா? நாங்களும் வருகிறோம்!"

"பிறகு நீங்கள் வரலாம்! முதலில் நான் சென்று, அங்கு இருப்பவர்களின் மனநிலையையும், மன்னனின் தன்மையையும் அறிந்து கொண்டு வருகிறேன்!"

"விரைவாக வந்து விடுங்கள்!"

"சரி!"

திருவஞ்சைக் களத்திற்குச் சென்றேன்! அந்த அழகிய நகரில் அடியெடுத்து வைத்ததும், எனக்கு ஒரு விதமான மகிழ்ச்சி உண்டாயிற்று!

சிலப்பதிகாரம் என்னும் பெரும் காவியத்தைத் தந்து, மங்காப் புகழ் பெற்ற இளங்கோவடிகள் பிறந்த நகரல்லவா இது! தமிழரின் பெருமையைக்குறைத்துப் பேசிய ஆரிய மன்னர்களின் தலையில் கல் சுமந்து வரச் செய்த, வீரமன்னன் சேரன் செங்குட்டுவன், சிம்மாசனத்தில் வீற்றிருந்து ஆட்சிபுரிந்த நல் நகரமல்லவா இது?—இப்படி நான் சிந்தித்துக் கொண்டே நடந்து கொண்டிருக்கையில், குதிரைகளின்மீது பலர் வருவது எனக்குத் தெரிந்தது! தெருவில் ஒதுங்கி, ஓரமாக ஒரு பக்கம் நின்றேன்.

அருகே இருந்த ஒருவரைப் பார்த்து, "யாரப்பா வருவது?" என்று கேட்டேன்! "மன்னர் வருகிறார்!" என்று அவன் கூறிமுடிப்பதற்கும், மன்னரும் அவரது பரிவாரங்களும் என் அருகே வருவதற்கும் சரியாக இருந்தது! முதல் முறையாக அன்று தான் நான் சேரமன்னன் சேதனனைப் பார்த்தேன்!

"எங்கே போகிறார்கள்?" என்று அவனை நான் கேட்டேன்! தனக்கு அதன் விவரம் தெரியாது என்று அவன் பதிலளித்தான்! மன்னனின் ஆட்சியைப் பற்றிக் கேட்டேன்! வெகுவாகப் பாராட்டியே அவன் பேசினான்! என் உள்ளம் குளிர்ந்தது போல் இருந்தது!

நகரின் சிலபகுதிகளைப் பார்த்து விட்டு, தங்கி இருந்த சிற்றூருக்குப் புறப்பட்டேன்! சிற்றூரை அடைந்ததும், என் கண்களை என்னாலே நம்ப முடியவில்லை! கிராமத்திலிருந்த மக்களெல்லாம் என்னைவியப்போடு நோக்குவதை அறிந்தேன்! எங்கள் குடிசையின் முன்பு குதிரைகளும் வீரர்களும் நின்று கொண்டிருந்தார்கள்! சேர மன்னன் சேதனன் குடிசையின் முன்புஒரு ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தார்! அவரோடு இசையொலி ஏதோ பேசிக் கொண்டிருந்தாள்! அவள் கண்களில் கண்ணீர் ஆறுபோல் ஓடி வந்து கொண்டிருந்தது!

(தொடரும்)

நீங்கள் விரும்பும் புத்தகங்கள்!

	ரூ. அ
கதம்பம்.	0
அவன் வாழ்வு	0
(ஆசைத்தம்பி)	
பேசும்பிணம்	0
இன்பக்கனவு	0 1
துளிதேன்	0
குஷ்பகாட்டு அழகி	0
(இராதா மணாளன்)	
பெண்களை நம்பலாமா	0
காதல் புரிவது எப்படி	0
காதல் கடிதங்கள்	0
ஏழையின் அரசியல்	0
பெரியாரும் கவிஞரும் அண்ணாவும்	0
காரல்மார்க்ஸ்	1
(சதாசிவம்)	

தபாற் செலவு தனி

பகுத்தறிவுப் பாசறை,
பவழக்காரத்தெரு,
சென்னை.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar [redacted] Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons